# அனைத்து துறை அலுவலர்களுடனான கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம்

## மாநில மகளிர் ஆணையத் தலைவர் குமரி தலைமையில் நடைபெற்றது



தென்காசி டிச.12:

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவர் குமரி தென்காசி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்ள வருகை மற்றும் தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், முன்னிலையில் அனைத்து துறை அலுவலர்களுடனானகலந்தாய்வுஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவர் குமரி தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையத் தலைவர் குமரி தென்காசி மாவட்டத்தில் ஆய்வு மேற்கொள்வதற்காக வருகை புரிந்தார். ஆலங்குளம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்;ற பெண்களுக்கெதிரான வன்கொடுமைகள் தடுப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கல்லூரி மாணவிகளிடம் பெண்களுக்கான சட்டங்கள், குழந்தை திருமணம் தடுப்பு, பாதுகாப்பு மற்றும் இலவச உதவி எண்கள் ஆகியன பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மகளிர் திட்டம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் காவல் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு தங்கள் துறை சார்ந்த திட்டங்கள் பற்றியும் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பற்றியும் எடுத்துரைத்தனர்.

மேலும், கல்லூரி மாணவிகள் பெண்கள் இலச்சினை மற்றும் பெண்கள் உதவி எண்ணான 181 போன்ற வடிவில் நின்று பெண் குழந்தைகளை காப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் என்பதினை விளக்கும் விதமாக பலூன்களை பறக்கவிட்டனர்.மேலும் பெண்கெளுக்கெதிரான வன்கொடுமைகள் தடுப்பு விழிப்புணர்வாக கை அச்சு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.மேலும் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நடைபெற்ற அனைத்துறை அலுவலருக்கான ஆய்வு கூட்டம் கலெக்டர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பணிபுரியும் இடங்களில் பெண்கெளுக்கெதிரான பாலியல் வன்கொடுமை தடுப்பு, உள்ளக புகார் குழு அமைப்பது பற்றியும் மற்றும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.மேலும், கலெக்டர் முயற்சியில் பாலியல் வன்கொடுமைக்கெதிரான புகார்களுக்கு அச்சம் தவிர் எனும் செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை வெகுவாக பாரட்டினார்.

இந் நி கழ்ச் சி யில், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயச்சந்திரன், திட்டஇயக்குநர்(மகளிர் திட்டம்) மதி இந்திரா பிரியதர்ஷினி, மாவட்ட சமூகநல அலுவலர் (சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை) மதிவதனா மற்றும் அனைத்து துறை அரசு உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# அம்பாசமுத்திரம் வேல்ஸ் வித்யாலயா மேல்நிலை பள்ளியில் சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி



தென்காசி டிச12:

அம் பா ச முத் தி ரம் வேல்ஸ் வித்யாலயா மேல்நிலைப்பள்ளி பள்ளியில் சாலை பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்வில் திருநெல்வேலி மாவட்ட போக்குவரத்து ஆணையர் சந்திரசேகர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றார். சாலை பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றியும் அதன் விதிமுறைகளை நாம் ஏன் பின்பற்ற வேண்டும் என்ற அவசியத்தைக் குறித்தும் மாணவர்களோடு கலந்துரையாடினார்.

வட்டார வாகன ஆய்வாளர் ராஜசேகர் மாணவ மாணவியர்களுக்கு சாலையைக் கடக்கும் முறை, கைபேசி பேசிக்கொண்டே வாகனம் ஓட்டுவது தவறு என்ற விழிப்புணர்வு , மாணவர் மனநிலையோடு இணைந்து கலந்துரையாடிய நிகழ்வு சிறப்புடையதாக அமைந்தது. மேலும் அதன் தொடர்ச்சியாக சமூக ஆர்வலர் மற்றும் நுகர்வோர் சங்கத்தின் உறுப்பினரும், லயன்ஸ் கிளப் தலைவருமான, சலீம் சிறப்புரையாற்றினார். மாணவர்களுக்கிடையே ஓட்டுநர் உரிமம் குறித்த அவசியம் மற்றும் அதற்கான வயது வரம்பு குறித்தும் தெளிவுரை ஆற்றினார். இறுதியாக மாணவ மாணவிகளுக்கு இடையே வினாடி வினா நடத்தப்பட்டு சிறப்பாக பதில் அளித்த மாணவ மாணவிகளுக்குப் பரிசுகளைத் சந்திரசேகர் வழங்கி சிறப்பித்தார். தாளாளர் வீரவேல் முருகன், இயக்குநர் இராஜ ராஜேஸ்வரி, நிர்வாக செயல் இயக்குநர் சிவ ராஜ் பாண்டியன், முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்

<u>தென்காசி மாவட்டத்தில்</u>

# சிறுதானியப் பரப்பு அதிகரிப்பு தமிழக முதல்வரின் திட்டத்திற்கு பலன்

தென்காசி டிச.12:

தமிழக முதல்வரின்புதிய சிறப்புத் திட்டங்களான தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம் மற்றும் மக்காச்சோள சாகுபடி சிறப்புத் திட்டங்களின் மூலம் இவ்வாண்டு சிறுதானியப் பயிர்களான சோளம், மக்காச்சோளம், கம்பு, கேழ்வரகு பயிர்களின் சாகுபடிப் பரப்பு கடந்த ஆண்டை விட 8060 ஏக்கர் பரப்பு (நவம்பர் மாதம் வரை) அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.இது குறித்து விபரம் அளித்த தென்காசி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மகாதேவன் சிறுதானியத்தின் தேவை தற்போழுது அதிகரித்துள்ளது. மேலும் மானாவாரி நிலங்களில் குறைந்தநீர் கொண்டு விளைச்சல் செய்யும் நிலைமையும் விவசாயிகளுக்கு தேவையாக உள்ளது. மேலும் சாகுபடி இலாபகரமாகவும் இருக்க வேண்டும்.இந்த நிலையில் குறைந்தநீர் மூலம் குறுகிய காலத்தில் இலாபகரமான பயிராக சிறுதானியப் பயிர்களான மக்காச்சோளம், சோளம், கம்பு, கேழ்வரகு ஆகிய பயிர்கள் விவசாயிகளுக்குக் கைகொடுக்கின்றன.மானாவாரியில் சிறுதானிய பயிர்கள் குறைந்தநீரில் நல்ல விளைச்சல் தருவதோடு விவசாயிகளுக்கு நல்ல விலையையும் பெற்றுத் தருகின்றன.தென் காசி மாவட்டத்தின் சிறுதானிய இயல்பான சாகுபடிப் பரப்பு 18,000 ஹெக்டர் ஆகும். கடந்த ஆண்டு 20811 ஹெக்டர் பரப்பில் சிறுதானியப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டது. இவ்வாண்டு கடந்த ஆண்டை விட 8060 ஏக்கர் 3224 ஹெக்டர் பரப்பு மேற்கொள்ளப்பட்டது. 24,035 ஹெக்டர் பரப்பாக அதிகரித்துள்ளது.சிறுதானிய சாகுபடி செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு நீர் தேவை குறைவு, பயிரின் வயது குறைவு, உரத் தேவைகுறைவு,பயிர் பாதுகாப்புச் செலவுகள் மிகக்குறைவு. மேலும் தற்சமயம் மனிதர்களின் உணவுப் பழக்க வழக்க மாறுதல் மூலம் சிறுதானியத்தின் தேவை அதிகரித்துள்ளது. எனவே விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கின்றது. இதன் மூலம் பிறபயிர்களில் சிரமப்பட்டு பெறும் வருவாய் எந்தச் சிரமும் இன்றி விவசாயிகளுக்குக் கிடைக்கின்றது.சிறுதானிய சாகுபடியை ஊக்குவிக்க வேளாண்மைத் துறை அமைச்சரின்; ரிியமுயற்சியால் தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் மாநில வேளாண் வளர்ச்சித் திட்டம் மக்காச்சோள சாகுபடி சிறப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் மூலம் விவசாயிகளுக்குத் தேவையான தரமான விதை உயிர் உரம், விதை நேர்த்தி மருந்துகள், நுண்ணுரம் மற்றும் இயற்கை உரங்கள் தெளிப்பு மருந்துகள் போன்ற இடுபொருட்கள் மானியத்தில் வழங்கப்படுகின்றன.இவ்வாண்டு தமிழ்நாடு சிறுதானிய இயக்கத்திற்கு ரூ.6.8 லட்சமும், மாநில வேளாண் வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.72.5 லட்சமும் மக்காச் சோள சாகுபடி சிறப்புத் திட்டத்திற்கு ரூ.123.6 லட்சமும் ஆக மொத்தம் ரூ.2.029 கோடி ரூபாய் தென்காசி மாவட்டத்திற்குப் பெறப்பட்டு திட்டப்பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது என மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மகாதேவன் தெரிவித்துள்ளார்.விவசாயிகள் இத்திட்ட மானியங்களைப் பெற்று சிறந்த முறையில் சிறுதானிய சாகுபடி மேற்கொண்டு இலாபம் பெற வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

<u>போகநல்லூர் ஊராட்சியில்</u>

# தார் சாலை அமைக்கும் பணி: மாவட்ட கவுன்சிலர் கனிமொழி துவக்கி வைத்தார்



**தென்காசி டிச.12:**

தென்காசி தெற்கு மாவட்டம் கடையநல்லூர் ஒன்றியம் மாவட்ட துணை செயலாளரும், மாவட்ட கவுன்சிலருமான வழக்கறிஞர் கனிமொழி பகுதியான போக நல்லூர் ஊராட்சியில் செண்பகநல்லூரிலிருந்து ரயில்வே கேட் போகும் சாலையில் ரு 11.50 இலட்சம் மதிப்பில் தார் சாலை அமைப்பதற்கான பணியை மாவட்ட கவுன்சிலர் வழக்கறிஞர் கனிமொழி தலைமையில் அவைத்தலைவர் சுந்தர மகாலிங்கம், கடையநல்லூர் முன்னாள் ஒன்றிய செயலாளர் காசி தர்மம் துரை, போகநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் சண்முகப்பிரியா, உதயநிதி நற்பணி மன்ற பொருளாளர் செண்பக நல்லூர் கண்ணன், எட்டாவது வார்டு உறுப்பினர் ரஞ்சிதம், ஒன்பதாவது வார்டு உறுப்பினர் மாரியப்பன், முத்து செல்வம் ஊர் நாட்டாமை, பாலசுப்பிரமணியன், மகேஷ், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் தங்கபாண்டி, ஆறாவது வார்டு உறுப்பினர் காளி பாண்டி, நாளாவது வார்டு உறுப்பினர் கணேசன், இரண்டாவது வார்டு உறுப்பினர் விஜயா பானு, 1வது வார்டு உறுப்பினர் பேச்சியம்மாள், 5வது வார்டு உறுப்பினர் மாரியம்மாள், கணேசன்,மனோகர், கருத்துரை, மகேந்திரன், நாகராஜ், பிச்சையா, ராமையா மதுமிதா நதியா அரசு ஒப்பந்ததாரர் தம்பி பிரகதீஷ் மற்றும் ஊர் பொதுமக்கள் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார் உடன் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

# உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்: ஆய்க்குடி அமர்சேவா சங்க குழந்தைகளுக்கு மதிய விருந்து வழங்கும் நிகழ்ச்சி



தென்காசி டிச.12:

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு தென்காசி தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் நாகராஜ் சரவணா ஏற்பட்டில் ஆய்க்குடி அமர்சேவா சங்கத்தில் படிக்கிற குழந்தைகள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஆய்குடி பேரூர் கழக செயலாளர் சிதம்பரம் தலைமை தாங்கினார். மாவட்ட துணைச் செயலாளரும் மாவட்ட கவுன்சிலருமான கனிமொழி ,தலைமை பொதுக்குழு உறுப்பினர் சாமிதுரை, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் மாரியப்பன், முன்னாள் கடையநல்லூர் ஒன்றிய கழக செயலாளர் காசிதர்மம் துரை ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் நாகராஜ் சரவணன் வரவேற்று பேசினார். தென்காசி தெற்கு மாவட்டம் முன்னாள் கழகச் செயலாளர் சிவ பத்மநாதன் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கி வாழ்த்தி பேசினார்.

நிகழ்ச்சியில் கீழப்பாவூர் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் சீனித்துரை, மாவட்ட பொ றுப்பு குழு முன்னாள் உறுப்பினர் மேகநாதன், ஆலங்குளம் பேரூராட்சி மன்ற தலைவர் சுதா மோகன் லால், மாவட்ட தொண்டர் அணி தலைவர் வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர் தர்மராஜ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் விமலா ராணி, மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் கவுன்சிலர் புணமாலை, மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் மோகன்ராஜ், மாவட்ட விவசாய அணி துணை தலைவர் இட்லி செல்வன், முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர் தங்க செல்வம், மாவட்ட பிரதிநிதி அன்பழகன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி துணை அமைப்பாளர் நாகப்பன், முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் முத்துவேல், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் தீபன் சக்ரவர்த்தி, கழக வழக்கறிஞர்கள் புகழேந்தி முருகன், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் பரமசிவன் ,காசி பாண்டியன் ஒன்றிய பிரதிநிதி சேர்மலிங்கம், அருணாசலம் ,ஏபிஎன் குணா, இளைஞர் அணி அரவிந்த்திலக் ,முன்னாள் மாணவர் அணி தினேஷ் பாண்டியன், ஆய்க்குடி வார்டு கழகச் செயலாளர்கள் மாடசாமி, சுடலை, சிவகுமார் மகேந்திரன், மாசாணம், முன்னாள் கவுன்சிலர் சுரேஷ், பாலசுப்பிரமணியன், சடையப்பன், கார்த்திக் இளைஞரணி முரளி ,நவீன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் . பேரூராட்சி கவுன்சிலர் மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் புணமாலை நன்றி கூறினார்.

# நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் மெகா தூய்மைப்பணி முகாம்



நாசரேத் டிச.12.

தூத்துக்குடி மாவட்டம், ஏரல் தாலுகாவில் உள்ள நாசரேத் மர்காஷிஸ் மேல்நிலைப்பள்ளியில் மெகா தூய்மை பணி முகாம் நடைபெற்றது.

பள்ளியின் உதவி தலைமை ஆசிரியர்கள் சாரா ஞானபாய் மற்றும் சார்லஸ் திரவியம் ஆகியோர் முகாமினை துவக்கி வைத்தனர். நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் ஜெய்சன் சாமுவேல், சாரணர் இயக்க பொறுப்பாளர் ஆபிரகாம் இம்மானுவேல், தேசிய பசுமை படை பொறுப்பாளர் அம்புரோஸ் சுகிர்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளியில் அமைந்துள்ள கால்பந்து மைதானம், ஹாக்கி மைதானம் மற்றும் பள்ளியின் பின்புறம் உள்ள பகுதிகள் சுத்தம் செய்யப்பட்டன. தேவையற்ற நிலையில் வளர்ந்திருந்த புறச்செடிகள், பிளாஸ்டிக் நெகிழி கழிவுகள் மற்றும் வீணாகக் கிடந்த தாள்கள் ஆகியவை தூய்மைப்படுத்தப்பட்டன. மெகா தூய்மை பணியில், நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்கள், தேசிய மாணவர் படை வீரர்கள், சாரணர் இயக்க மாணவர்கள், தேசிய பசுமைப்படை மாணவர்கள் இளையோர் செஞ்சிலுவை சங்க மாணவர்கள் ஆகியோர் பங்கு பெற்றனர். நாள் முழுவதும் மெகா தூய்மை பணி நடை பெற் றது.மெகா தூய்மை பணி முகாமிற்கான ஏற்பாடுகளை, தேசிய மாணவர் படை அலுவலர் சுஜித் செல்வசுந்தர், இளையோர் செஞ்சிலுவை சங்க பொறுப்பாளர் ஜென்னிங்க்ஸ் காமராஜ், இயற்பியல் ஆசிரியர் ஜெர்சோம் ஜெபராஜ், நாட்டு நலப்பணி திட்ட உதவி அலுவலர்கள் தனபால், ரீபைனர் மேஷாக் மற்றும் பசுமை தோட்ட பாதுகாவலர் ஜெபஸ்டின் ஆகியோர் செய்திருந்தனர். மெகா தூய்மை பணியில் ஈடுபட்ட மாணவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது. தூய்மை பணியில் ஈடுபட்ட மாணவர்களையும் பொறுப்பாசிரியர்களையும் தாளாளர் சுதாகர், தலைமையாசிரியர் குணசீலராஜ், பிற ஆசிரியர்கள், ஆசிரியைகள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் பாராட்டினர்.



கைசிக ஏகாதசியை முன்னிட்டு திருமலை திருப்பதி தேவஸ்தானத்திலிருந்து ஸ்ரீரங்கம் அரங்கநாதசுவாமிக்கும், உற்சவர் நம்பெருமாளுக்கு பட்டு வஸ்திரங்கள் மற்றும் அரங்கநாயகி தாயாருக்கு பட்டு புடவைகள் கொண்டு வந்திருந்தனர். திருப்பதி தேவஸ்தான துணை நிர்வாக அலுவலர் லோகநாதன், மடம் பொறுப்பாளர் ராஜா ரெட்டி ஆகியோரிடமிருந்து வஸ்திரமரியாதையை ஸ்ரீரங்கம் கோவில் இணை ஆணையர் மாரியப்பன், உள்துறை கண்காணிப்பாளர் வேல்முருகன்பெற்றுக்கொண்டனர்.

# பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பாரதியார் பிறந்தநாள் விழா



குற்றாலம் டிச.12:

பாரத் மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பாரதியார் பிறந்தநாள் விழா கொண்டாட்டம்

பாரதியார் பிறந்தநாள் விழா இறைவணக்கப் பாடலுடன் தொடங்கியது. மாணவி திவ்யதர்ஷினி விழாவைத் தொகுத்து வழங்கினார். மழலையர் பிரிவில் ரவின் பாரதியார் போல் வேடமணிந்து பாரதியார் பாடலை அழகாகப் பாடினார். மாணவி மிருதுளா ஜனனி பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை பற்றி உரையாற்றினார். மாணவன் கோதண்டராமன் பாரதியார் கவிதையைப் பாடலாகப் பாடினார். இறுதியில் மாணவன் திலிப் உறுதிமொழி கூறி விழா இனிதே நிறைவுற்றது. இவ்விழாவினை பாரத் கல்விக் குழுமத்தின் தலைவர் மோகன கிருஷ்ணன், செயலாளர் காந்திமதி மோகன கிருஷ்ணன், ஆலோசகர் உஷா ரமேஷ், இயக்குனர் இராதாபிரியா மற்றும் பள்ளி முதல்வர் பாலசுந்தர், துணை முதல்வர் செல்வலிங்கம் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**ENROLMENT NOTICE**

After 10 days of the Publication of this notice and Within threemonths thereafter I, V. MARISELVAM (Age:31) s/o. VELLADURAI permanently residing at No.7C, sasthirinagar, Kovilpatti, Thoothukkudi Dt, Tamilnadu 628501. intend having my enrolment As an advocate moved before the Bar Council of TamilNadu, bar Council Buildings, High Court Campus, Chennai-104. Those Who have any valid objections may notify the same to the bar council within 10 days.

V. MARISELVAM .

**தவறிவிட்டது**

நான் கடந்த 09.12.2024 அன்றுகாசிமேஜர்புரத்திலிருந்து தென்காசிக்கு பேருந்தில் செல்லும் போது எனது கையிலிருந்த அசல் சொத்து ஆவணங்கள் எண்கள்: 1814/2017, 413/1992 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

இ.குத்தாலம்
154, பஞ்சாயத்து ஆபீஸ் பின்புறம்
காசிமேஜர்புரம், தென்காசி

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி.**

மாரிமுத்து, தபெ. கருப்பசாமி,
களண்: 101, பி. தெற்குதெரு,
தீத்தாம்பட்டி,
கோவில்பட்டி தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதார்

எதிர்

வட்டாட்சியர், கோவில்பட்டி.
சார்பதிவாளர், எட்டையாபுரம்.
எதிர்மனுதார்கள்

அறிவிப்பு

எனது பாட்டி அழகம்மாள் கபெ. வீரபுத்திரன் என்பவர் கடந்த 15.07.1998. அன்று களண்: 212, தெற்குதெரு, தீத்தாம்பட்டி, கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.

இப்படிக்கு
மாரிமுத்து.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி.**

மாரிமுத்து, தபெ. கருப்பசாமி,
களண்: 101, பி. தெற்குதெரு,
தீத்தாம்பட்டி, கோவில்பட்டி
தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.
மனுதார்

எதிர்

வட்டாட்சியர், கோவில்பட்டி.
சார்பதிவாளர், எட்டையாபுரம்.
எதிர்மனுதார்கள்

அறிவிப்பு

எனது தாத்தா வீரபுத்திரன் தபெ. நிறைகுளத்தான் என்பவர் கடந்த 05.04.1971. அன்று களண்: 212, தெற்குதெரு, தீத்தாம்பட்டி, கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.

இப்படிக்கு
மாரிமுத்து.

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி.**

முருகன்,
களண்: 3/170, நடுத்தெரு,
புதுஅப்பனேரி,
கோவில்பட்டி தாலுகா,
தூத்துக்குடி மாவட்டம்.
மனுதார்

எதிர்

வட்டாட்சியர், கோவில்பட்டி.
சார்பதிவாளர், கோவில்பட்டி.
எதிர்மனுதார்கள்

அறிவிப்பு

எனது தாயார் சுந்தரம்மாள் என்பவர் கடந்த 07.02.1998. அன்று மேற்படி முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர்மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.

இப்படிக்கு
முருகன்,

**கனம் கோட்டாட்சியர் நீதிமன்றம் கோவில்பட்டி.**

கமலா, கபெ. பாக்கியராஜ்,
களண்: 2/63, நடுத்தெரு,
வாழவந்தாள்புரம்,
கத்தாளம்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.
மனுதார்

எதிர்

வட்டாட்சியர், எட்டையாபுரம்.
சார்பதிவாளர், எட்டையாபுரம்.
எதிர்மனுதார்கள்

அறிவிப்பு

எனது தாயார் அழகம்மாள் கபெ. மாடசாமி என்பவர் கடந்த 15.03.1973. அன்று களண்: 14, காலணிதெரு, எட்டையாபுரம், எட்டையாபுரம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். என்ற முகவரியில் வைத்து இறந்ததை மேற்படி எதிர் மனுதாரரின் இறப்பு பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கண்ட 15 தினங்களுக்குள் மேற்படி கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் நேரிலோ, எழுத்துமூலமோ, ஆஜராகி தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்து கொள்ள வேண்டும். என்று இதன் மூலம் அறிவிக்கபடுகிறது.

இப்படிக்கு
கமலா,

